[2005 மார்ச் 28

(ஆ) விரைவு நீதிமன்றங்கள் 31–3–2005–க்குப் பிறகும் செயல்பட மாநில அரசு நிதி வழங்குதல்--மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றவியல் அமர்வு நீதிமன்றங்களில் நிலுவையில் இருக்கும் வழக்குகளை விரைந்து விசாரித்து தீர்வு காண வேண்டுமென்பதற்காக நாடெங்கிலும் விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று 11–வது நிதிக் குழு பரிந்துரைத்தது. இந்தப் பரிந்துரையின்படி தமிழ்நாட்டில் 49 விரைவு நீதிமன்றங்களை நிறுவிட மைய அரசு ஏற்பளித்தது.

இதன்படி முதற்கட்டமாக, 30 விரைவு நீதிமன்றங்களை அமைத்திட 3–8–2001 அன்று நான் ஆணையிட்டேன். இந்த நீதிமன்றங்கள் 2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் செயல்பட்டு வருகின்றன. 18–12–2001 அன்று அடுத்த கட்டமாக, மேலும் 19 விரைவு நீதிமன்றங்கள் அமைத்திட தமிழ்நாடு அரசு ஆணையிட்டது. இந்த கூடுதல் விரைவு நீதிமன்றங்கள் 2002 ஆம் ஆண்டு பிப்ரவரி/மார்ச் மாதம் முதல் செயல்பட்டு வருகின்றன.

முற்பகல் 11–35

இந்தியாவிலேயே விரைவு நீதிமன்றங்களை நிறுவுவதில் சாதனை புரிந்த ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) விரைவு நீதிமன்றங்களை அமைத்து வழக்குகளை விரைந்து விசாரித்து நீதி வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கிறது என்று மத்திய அரசே பாராட்டியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் உள்ள 49 விரைவு நீதிமன்றங்கள்மூலம் 31–1–2005 வரை, 1,23,503 வழக்குகள் தீர்வு காணப்பட்டுள்ளன என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விரைவு நீதிமன்றங்கள் அமைத்து செயல்படுத்தப்படுவதற்கான முழுச் செலவினையும் மைய அரசு ஏற்க வேண்டும். இதன்படி இந்த விரைவு நீதிமன்றங்களைச் செயல்படுத்த மத்திய அரசு மொத்தம் 14.12 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது. விரைவு நீதிமன்றங்களின் செயல்பாடு 31–3–2005 அன்றுடன் முடிவடைகிறது.

1–4–2005 அன்று முதல் விரைவு நீதிமன்றங்களைத் தொடர்ந்து நடத்துவதற்குத் தேவையான நிதியை மத்திய அரசு இதுவரை ஒதுக்கீடு செய்யாததால், தமிழகத்தில் உள்ள இந்த விரைவு நீதிமன்றங்கள்

2005 மார்ச் 28] [செல்வி ஜெ ஜெயலலிதா]

தொடர்ந்து செயல்படுமா என்று தெரியாமல் வழக்குத் தொடுத்துள்ள பொதுமக்கள் குழப்பத்தில் தவிப்பதாக தெரிவித்து தேவையற்ற ஒரு கலக்கத்தை மக்கள் மத்தியில் உருவாக்க சிலர் முனைந்துள்ளனர். இது மிகவும் துரதிர்ஷ்டவசமானதும் வருந்தத்தக்கதும் ஆகும்.

விரைவு நீதிமன்றங்களில் 26,455 வழக்குகள் நிலுவையில் உள்ளன. எனவே, இந்த விரைவு நீதிமன்றங்கள் தொடர்ந்து செயல்படுவது மிகவும் இன்றியமையாதது ஆகும். வழக்கு தொடுப்போருக்கு விரைவு நீதிமன்றங்கள்மூலம் நீதி விரைவில் கிடைக்கப் பெறுவதால் விரைவு நீதிமன்றங்கள் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்பது எனது எண்ணம் ஆகும். 18–9–2004 அன்று புது டெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மற்றும் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிகளின் மாநாட்டில் நான் கலந்துகொண்டு, விரைவு நீதிமன்றங்கள் 31–3–2005–க்குப் பிறகும் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்றும், அதற்குத் தேவையான நிதியை மைய அரசு ஒதுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டேன். மேலும், விரைவு நீதிமன்றங்களை 31–3–2005–க்குப் பிறகும் நீட்டிப்பது குறித்த மைய அரசின் நிலைப்பாட்டினைத் தெரிவிக்குமாறு 18–3–2005 அன்று மத்திய அரசுக்குக் கடிதம் அனுப்பப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள விரைவு நீதிமன்றங்கள் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறோம். ஒருவேளை மைய அரசிடமிருந்து 31–3–2005–க்குள் இதற்குச் சாதகமான பதில் வரவில்லை என்றாலும், தமிழகத்தில் தற்போது செயல்பட்டு வரும் 49 விரைவு நீதிமன்றங்களும் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்று நான் ஆணை பிறப்பித்துள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வாறு இந்த நீதிமன்றங்கள் தொடர்ந்து செயல்படத் தேவைப்படும் நிதியான 5 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசே வழங்கிடவும் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படையில், தமிழகத்தில் தற்போதுள்ள 49 விரைவு நீதிமன்றங்களும் மேலும் ஓர் ஆண்டுக்குத் தொடர்ந்து செயல்பட 24–3–2005 ஆம் நாளன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாட்டில் உள்ள விரைவு நீதிமன்றங்கள் கலைக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சத்திற்கு இடமில்லை என்றும், தமிழ்நாட்டில் தற்போது செயல்பட்டு வரும் 49 விரைவு நீதிமன்றங்கள் மக்கள் நலனைக் கருத்தில்கொண்டு தொடர்ந்து செயல்படும் என்பதையும் உறுதியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)